**சுருக்கம்**

நெடுஞ்சாலைத்துறை–தஞ்சாவூர் பெரிய கோயில் 1000 ஆண்டு நிறைவு விழா –தஞ்சாவூர் பெரிய கோயிலை சுற்றியுள்ள பகுதிகளில் ரூ.924 இலட்சம் (ரூபாய் தொள்ளாயிரத்து இருபத்தி நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பிலான சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (CRIDP) நிர்வாக ஒப்புதல் –ஆணை வெளியிடப்படுகிறது

---

நெடுஞ்சாலை(ம) சிறுதுறைமுகங்கள் (எச்.என்–1) துறை

அரசாணை (டி) எண்.175 நாள்: 27.09.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041, புரட்டாசி 11

படிக்கவும்:

1. தலைமைப் பொறியாளர் (க(ம)ப), நெடுஞ்சாலைத் துறை, கடித எண்.22900/திட்டம்.2/2010, நாள் 17.08.2010

*******

மேலே பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் தஞ்சாவூர் பெரிய கோவில் 1000 வது ஆண்டு விழா குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2010 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்ற உயர்மட்டக் குழு கூட்டத்தினை தொடர்ந்து தஞ்சாவூர் பெரிய கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் சாலை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ரூ.9.24 கோடி மதிப்பிலான கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசின் ஒப்புதலைக்கோரி தலைமைப்பொறியாளர்(க(ம)ப) கருத்துரு அனுப்பியுள்ளார்:-

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் நாகை கூடலூர் –மைசூர்–சாலை கி.மீ 87/0–88/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் (கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலை) | 1.00 | 160.00 | புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மணிமண்டபம் வழியாக தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் செல்லும் சாலை (மாநிலச் சாலை) |
| 2 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் நாகை கூடலூர் –மைசூர்–சாலை கி.மீ 88/0–89/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் (கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலை) | 1.00 | 160.00 | புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மணிமண்டபம் வழியாக தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் செல்லும் சாலை (மாநிலச் சாலை) |
| 3 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் நாகை கூடலூர் –மைசூர்–சாலை கி.மீ | | 30.00 | இப்பணி முடிவுற்றால் மழைக் காலங்களில் கீழ்மட்ட பாலத்தில் |

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (லட்சங்களில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| | 83/6–84/2 இல் உள்ள கீழ்மட்ட பாலத்திற்கு வடிகால் கட்டும் பணி செய்தல்(கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலை) | | | தண்ணீர் தேங்குவது தவிர்க்கப்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்படாமல் இருக்கும் (மாநிலச் சாலை) |
| 4 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் பெரம்பலூர்–மானாமதுரை சாலை கி.மீ 68/0–69/740 வரை கான்கீரிட் தளம் அமைத்தல், கி.மீ 69/740–70/2 வரை மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ 70/0–70/2 வரை சாலையின் இருபுருவங்களையும் அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் | 1.30 | 150.00 | அரண்மனை மற்றும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் சாலை (மாநில நெடுஞ்சாலை) |
| 5 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் தஞ்சாவூர் –வல்லம் சாலை கி.மீ 4/8–6/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் | 1.20 | 160.00 | தமிழ் பல்கலைக்கழகத்திலிருந்து தென்னக பண்பாட்டு மையம் வழியாக தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் சாலை (மாவட்ட பெருஞ்சாலை) |
| 6 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் தஞ்சாவூர் –வல்லம் சாலை கி.மீ 6/0–7/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் | 1.00 | 160.00 | தமிழ் பல்கலைக்கழகத்திலிருந்து தென்னக பண்பாட்டு மையம் வழியாக தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் சாலை (மாவட்ட பெருஞ்சாலை) |
| 7 | தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் தஞ்சாவூர் –வல்லம் சாலை கி.மீ 0/0–1/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் | 1.00 | 104.00 | நகரின் மையப்பகுதியிலிருந்து மேம்பாலம் வழியாக தஞ்சாவூர் பெரிய கோவிலுக்குச்செல்லும் முக்கிய சாலை (மாவட்ட பெருஞ்சாலை) |
| | **மொத்தம்** | **6.50 கி.மீ** | **924.00** | |

2. தலைமைப்பொறியாளர் (க(ம)ப) நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.924 இலட்சம் (ரூபாய் தொள்ளாயிரத்து இருபத்தி நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பிலான பணிகளுக்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேட்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளில் வரிசை எண். 1முதல் 4 வரையிலான பணிகளுக்குண்டான செலவினங்களை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**அ. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாநில நெடுஞ்சாலைகள்**

5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

03 –மாநில நெடுஞ்சாலைகள்

337 – சாலைப்பணிகள் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II மாநிலத் திட்டம்

JI –மாநில நெடுஞ்சாலைகளுக்கான விரிவான சாலை அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்.

16 – பெரும்பணிகள் **(து.தொ.கு.எண்.5054–03–337–JI–1602)**

**ஆ. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கிய சாலைகள்**

5054 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதன செலவு

04 – மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும்

337 – சாலைப்பணிகள் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்

JT -மாவட்டப் பெருஞ்சாலைகளுக்கான விரிவான சாலை அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

16 – பெரும்பணிகள் **(து.தொ.கு.எண்.5054–04–337–JT–1609)**

4. இவ்வரசாணையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இது தொடர்பாக மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தலைமைப்பொறியாளர் (க(ம்)ப) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் இவ்வரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் வேறு எந்தவொரு திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதனை உறுதிபடுத்திக் கொள்ளுமாறும் தலைமைப்பொறியாளர்(க(ம)ப) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.கு. எண்.52692/பொ.ப.I/2010, நாள்: 23.09.2010–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர்(க(மப), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் அவர்கள், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலர், நெடுஞ்சாலை(ம) சிறுதுறைமுகங்கள் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
நெடுஞ்சாலை(ம) சிறுதுறைமுகங்கள்துறையின் சம்பந்தப்பட்ட பிரிவுகள், சென்னை–9
செயலர், சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.
பதிப்பாசிரியர், தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை–2
இயக்குநர். செய்தி (ம) மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நிதி (BG-I, BG-II. Ways & Means, PWI B -coord, துறை, சென்னை–9
NIC, சென்னை–9
இ.கோ. / உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்